# நூலகவியல்

மலர் 1 காலாண்டு சஞ்சிகை இதழ் 1

EVELYN RUTNAM LIBRARY JAFFNA
535
16/10

## இந்த இதழில்....

1. கிருஷ்ணராஜா, செ.
— சோழர் காலத் தமிழகத்திலே நூலக நடவடிக்கைகள். ... 1

2. பாக்கியநாதன், ந.
— நூலக தகவற் சேவை வலயங்கள். ... 7

3. பாலசுந்தரம், வி.
— இலங்கையில் நூலகக் கல்வி : ஒரு வரலாற்று நோக்கு. ... 12

4. மாணிக்கவாசகர், க்ர
— யாழ். குடாநாட்டின் நடமாடும் நூலகம். ... 15

1/6
REFERENCE LIBRARY
JAFFNA

நூலகவியல்: காலாண்டு வெளியீடு
(NOOLAHAVIYAL : Quarterly Publication)

மலர்:1 இதழ்:1 - செப்ரெம்பர், 1985

ஆசிரியர் குழு: திரு. சு. முருகவேள்,
B.A.(Hons), Post. Grad. Dip in lib. (Lond.)

திரு. வே. இ. பாக்கியநாதன்.
B.A., M. Sc. ( Lib. Sc.)

கலாநிதி இ. பாலசுந்தரம்
B.A., Ph. D.

திருமதி. ரோ. பரராஜசிங்கம்.
B.Sc., M.L.I.S. (Madras)

திருமதி. ரூ. நடராசா
B.A., A.S.L.L.A.

வெளியீடு: அயோத்தி நூலக சேவை
ஆனைக்கோட்டை.

சந்தா: தனிப்பிரதி ரூபா 7/50; ஆண்டுச் சந்தா ரூபா 30/00.

தொடர்பு: என். செல்வராஜா
நூலகர்,
'இவ்லின் இரத்தினம்' பல்லின பண்பாட்டு நிறுவனம்,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

*******

மனிதரெல்லாம் அன்புநெறி காண்பதற்கும்
மனோபாவம் வானைப்போல் விரிவடைந்து
தனி மனித தத்துவமாம் இருளைப் போக்கிச்
சகமக்கள் ஒன்றென்ப துணர்வதற்கும்
இனிதினிதாய் எழுந்தஉயர் எண்ணமெல்லாம்
இலகுவது புலவர்தரு சுவடிச்சாலை;
புனிதமுற்று மக்கள்புது வாழ்வு வேண்டில்
புத்தகசாலை வேண்டும் நாட்டில் யாண்டும்.

– பாரதிதாசன்

கலாநிதி எஸ்.ஆர். ரங்கநாதன் அவர்களுக்கு

இவ்விதழ் - காணிக்கை.

நூலகவியலின் ஐந்து விதிகள்:

அ). நூல்கள் பயன்படுத்தப்படவேண்டியவை.
ஆ). ஒவ்வொரு வாசகருக்குமுரிய அவரது நூல்.
இ). ஒவ்வொரு நூலுக்குமுரிய அதனுடைய வாசகர்.
ஈ). வாசகரின் நேரம் பேணப்படல் வேண்டும்.
உ). நூலகம் ஒரு வளர்ச்சியடைகின்ற நிறுவனமாகும்.

நூலகப் பகுப்பாக்கத்தின் ஆரம்பத்தை நாம் அமெரிக்காவில் காண்கின்றோம். 1876ஆம் ஆண்டில் வெளியான டூயி தசாம்சப் பகுப்பாக்கத்தின் அம்சங்கள் மேற்குறிப்பிட்ட நூலகவியல் விதிகளின் 'இ', 'ஈ' ஆகியவற்றைப் பின்பற்றியவையாக அமைந்துள்ளன. 1896ஆம் ஆண்டில் வெளிவந்த சர்வதேச தசாம்சப் பகுப்பாக்கம் நூலகவியல் விதிகளில் 'ஆ' விதியை நிறைவு செய்வதாகும்.

நூலகவியற் பகுப்பாக்கத்திற்கு ஆசியக் கண்டம் வழங்கிய அரும் பெருந் திட்டமே "கோலன்" பகுப்பாக்கமாகும். பகுப்பாக்கத்துறையில் பின்பற்றப்பட்டு வந்த தசாம்சப் பகுப்பாக்கம், சர்வதேச தசாம்சப் பகுப்பாக்கம் ஆகிய இரண்டும் மேலைத்தேசச் சார்புடையவை. இவற்றில் ஆசிய நாடுகளின் தத்துவம், சமயம், மொழியியல், சட்டம், வரலாறு ஆகியவற்றிற்குத் தக்க இடம் அளிக்கப்படவில்லை. மேற்குநாடுகளில் இந்த விடயங்கள் தொடர்பான ஆசியநாட்டின் அடிப்படைத் தத்துவங்கள் போதியளவு உணரப்படாத காலத்தில் இத்திட்டங்கள் உருவாக்கப்பட்டமையே இதற்குக் காரணமெனலாம். ஆதலினால் இவ்விரு திட்டங்களும் சர்வதேசப் பொதுமையானவை அல்ல. "கோலன்" பகுப்பாக்கம் உலகின் அனைத்த நாடுகளுக்கும், பண்பாடுகளுக்கும் சமத்துவம் அளிப்பதனாலும், நூல்கள், சஞ்சிகைகள் ஆகியவற்றின் பகுப்பாக்கத்திற்குப் பயன்படக் கூடியதாக அமைவதனாலும், இது அனைத்துலகிற்கும் பொதுமையான நூலகவியற் பகுப்பாக்க விதிமுறை என்பது புலனாகின்றது."

(தமிழாக்கம்: வி.பா.) - எஸ்.ஆர்.ரங்கநாதன்.-

## சிறப்புரை.

எமது நாட்டில் நூற்றுக்கு தொண்ணூறு விகிதத்தினர் ஓரளவாகுதல் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள். இவர்கள் அனைவரும் பயனுள்ள துறைகளில் தமக்கு இயல்பாக அமைந்த ஆற்றல்களை விருத்தி செய்து கொள்ளவும், ஓய்வு நேரங்களை பண்பான, மகிழ்ச்சிகரமான வழிகளில் கழிக்கவும் உதவக்கூடிய நூலகங்களும், நூலக சேவையும் இல்லாமல் இருப்பது எம் நாட்டின் முக்கிய குறைகளில் ஒன்றாகும்; குறை மாத்திரம் அன்று, தீமையென்று கூடச் சொல்லலாம். படிக்க வாசிக்கத் தெரிந்தவர்கள் நல்ல நூல்கள் அகப்படாவிடின், அகப்படக்கூடிய எதையுமே படிப்பார்கள், வாசிப்பார்கள். பிரசுரத் தொழில் வெறும் வியாபாரத் தொழிலாக இருக்கும் ஒரு சூழ்நிலையில், இந்நிலைமை சமுதாய வாழ்வில் மிகவும் பயங்கரமான விளைவுகளை ஏற்படுத்தக் கூடியது.

நல்ல நூலகங்களை நிறுவுவதிலும், சீரான நூலக சேவையினை அளிப்பதிலும் தடையாக உள்ள காரணிகளில் இரண்டினை முக்கியமாகக் குறிப்பிடலாம். ஒன்று அரசு நூலகங்களினதும், நூலக சேவையினதும் இன்றியமையாமையினை உணர்ந்து செயற்படாமல் இருப்பது. நூலகங்களை நிறுவுவதும், நிறுவி அவை செவ்வனே நடைபெற நிதிவசதி செய்து தருவதும் அரசின் தலையாய பொறுப்பாகும். மற்றது, ஏற்கெனவே நிறுவப்பட்டு இயங்கிவரும் நூலகங்களையும் இன்னும் எதிர்காலத்தில் நிறுவப்படக்கூடிய நூலகங்களையும் அர்த்தமுள்ள முறையிலே, விஞ்ஞான ரீதியாக நிர்வகித்து சேவைபுரியக்கூடிய கல்வித் தராதரமும், நூலகத் தொழிற் பயிற்சியும் உள்ள நூலகர்கள் இல்லாமையாகும். இவையிரண்டும் ஒன்றையொன்று பற்றிய பிரச்சினைகள். நூலகங்கள் இருந்தாற்தான் சிறந்த நூலகர்கள் உருவாகுவார்கள்; தேவைப்படுவார்கள்; நூலகர்கள் இருந்தால் தான் நூலகங்களும் உருவாக முடியும். எனினும் எங்கேயேனும் ஓரிடத்தில் செயற்படத் தொடங்கத்தானே வேண்டும்!

எமது நாட்டில் சிறியனவும், அவ்வளவு சிறியன அல்லாதனவுமாக நூலகங்கள் என்ற பெயரில் சில நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. இவற்றில் ஏதோ தமக்குள்ள ஆற்றலுக்கு ஏற்ற முறையில் பணிபுரியும் பலர் இருக்கின்றனர். இவர்களுக்கு நூலகவியலின் அடிப்படைக் கோட்பாடுகளையும், தொழில் நுணுக்கங்களையும், இலட்சியார்த்த நோக்கங்களையும் அறியத்தருதல் இந்நாட்டில் நல்லதொரு நூலக சேவையினை உருவாக்கும் முயற்சியில் மிகுதியும் வேண்டப்படும், முதல் நிலைத் தொண்டாகும். இவற்றையெல்லாம் ஓரளவு அறிந்த இச்சில நூலகர்கள், 'நூலகச் செய்தியினை' மக்களிடம் கொண்டு செல்பவர்களாகவும், நூலக இயக்கத்தினை வெகுஜன இயக்கமாக்குகின்றவர்களாகவும் பரிணமிக்கின்ற வாய்ப்பு உண்டு. இச்சிறுவிதழ் இம்முதல் நிலைத் தொண்டினை ஒரு சிறிதாவது நிறைவேற்றி வைக்கும் என எதிர்பார்க்கலாம்

— சி. முருகவேள்,
நூலகர்,
யாழ். பல்கலைக்கழகம்.

# ஆசியுரை.

வே. இ. பாக்கியநாதன்
பீ.ஏ., எம்.எஸ்.சி (நூலகவியல்)

உப-அதிபர்,
தொழிநுட்பக்கல்லூரி,
யாழ்ப்பாணம்.

"போற்றுவார் போற்றட்டும், புழுதி வாரித் தூற்றுவார் தூற்றட்டும், ஏற்றதொரு கருத்தை எனின் எடுத்துரைப்பேன், எவர்க்கும் அஞ்சேன்" என்ற கண்ணதாசன் கவிக்-கொப்ப, தாம் நினைத்த கருத்தினை உருவாக்குவதில் முன்னின்றுழைக்கின்றார், எமது நன்மாணுக்கர்களில் ஒருவரான திரு. என். செல்வராஜா. நூலகவியல் சம்பந்தமாகக் காலாண்டுச் சஞ்சிகையொன்றினை வெளியிட எண்ணிய அவர், எமது கருத்துக்களைக் கேட்டபொழுது முதலில் எவர்க்கும் ஏற்படும் தயக்கம் இருக்கவே செய்தது. காளான்கள் முளைப்பது போன்று திடுதிப்பென சஞ்சிகைகள் தோன்றி மறைவது கண்கூடு, இருப்பினும் நினைத்ததைச் சாதிக்க வேண்டும் என்று திடசங்கற்பம் கொண்டவரினது அபிலாசையைத் தட்டிக்கழிக்க முடியவில்லை, தட்டிக்கழிக்கவும் முடியாது. இன்று நூலகவியலைக் கற்கும் மாணவர் தமக்குத் தேவையான விடயதானங்களைத் தாமே வாசித்து அறியக்கூடிய தமிழ் நூல்கள் எம்மிடம் இல்லை. நூலக வல்லுனர்களுக்கோ எம்மத்தியில் பஞ்சமில்லை, நூலுருவாக்குவதற்குச் சாதகமான சூழ்நிலை இன்று எம்மிடையே இல்லாத காரணத்தினால் இவர்கள் தமது ஆக்கங்களை வெளிக்-கொணர முடியாதுள்ளனர். எனவே இத்தகைய கைங்கரியத்தின் மூலம் நூலகத் துறைக்குப் புத்துயிர் அளிக்கலாம் என்பதாலும் மாணவர்களினது அறிவுத்திறனை விருத்தி செய்யலாம் என்பதாலும், நூலக அறிஞர்களின் ஆழ்ந்த புலமையை வெளிக் கொணருமுகமாகவும் இத்தகையதோர் முயற்சிக்கு உற்சாகமளிக்க வேண்டியது தமிழ்ச் சமுதாயத்தில் அக்கறை கொண்டவர்களினது தலையாய பணியாகும்.

இவரது கன்னி முயற்சி இதுவாகவிருப்பினும் கல்விமான்களும், நூலகவிற்பன்னர்களும், நூலகத்துறையில் ஆர்வமுடையோரும், நூலகவியல் கற்கும் மாணவர்களும் இதற்குக் காட்டும் பேராதரவும், ஒத்துழைப்புமே மென்மேலும் இது தொடர்ந்து வெளிவர உதவுமென்பது சொல்லாமலே விளங்கும். நூலகர்கள் என்றால் புத்தகங்களைத் தூசி தட்டி அடுக்கும் ஜீவராசிகள் என்ற எண்ணம் கல்வி கற்றவர்களிடையே இன்று வரை நிலவுகிறது. இதனை முற்றாக மாற்றியமைக்கக்கூடிய ஒரு சூழ்நிலையை இக் காலாண்டுச் சஞ்சிகை மக்கள் மத்தியில் ஏற்படுத்துமாயின் இம்முயற்சியில் பதிப்பாசிரி-யர் ஓரளவு வெற்றியடைந்துள்ளார் எனக்கருதலாம்.

இவரது இப்பணி தொடர்ந்து நடைபெற எமது ஆசிகள்.

*******

# சோழர் காலத் தமிழகத்திலே நூலக நடவடிக்கைகள்.

- செ. கிருஷ்ணராஜா.
விரிவுரையாளர்,
வரலாற்றுத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

## அறிமுகம்

நாகரிகம் தோற்றம் பெற்ற காலம் முதற்கொண்டே மனிதன் அறிவியற் துறைகளிலே ஈடுபட்டு வருகின்றான். அதுவே அவனது சிந்தனைத் திறனில் ஒரு புரட்சிகர மாற்றத்தை ஏற்படுத்தி, அவனை மிருக நாடோடி வாழ்க்கை முறைகளிலிருந்தும் விடுவித்து நிலையானதொரு 'நாகரிக வாழ்வு முறைக்கு' இட்டுச் சென்றது. இந்த நாகரிக வாழ்வு முறைக்கும் அவனது சிந்தனைக்குமிடையே மிக நெருங்கிய தொடர்பு இருந்ததனை அவனது வாழ்க்கை முறையில் ஏற்பட்ட 'கண்டுபிடிப்புக்கள்' சுட்டிக் காட்டுகின்றன. செம்பு உலோகமும், அவ்வுலோகத்தின் பயன்பாட்டுத் தன்மையினதும் கண்டுபிடிப்பே அம்மனிதனின் நாகரிக வாழ்வில் ஏற்பட்ட முதலாவது அறிவியற் துறைச் சாதனையாக அமைந்தது. இதனைத் தொடர்ந்து அடையப் பெற்ற பிற சாதனைகளுக்கும் சிறப்பாக சக்கரம் ( Wheel )பருவகாலக் கலண்டர் முறை, கணிதமுறை போன்றவற்றின் கண்டுபிடிப்புகளுக்கும் அவற்றின் உபயோகத்திறனுக்கும் அடிப்படையாக அமைந்தது, காலம் காலமாக ஒன்று சேர்த்து வைத்திருந்த அநுபவரீதியான அறிவியற் கூறுகளினதும் ஒருமித்த திரண்ட வடிவமேயாகும். இன்னொரு வகையில் குறிப்பிடுவதாயின் இவ்வொருமித்த திரண்ட வடிவமான ஆவணசாலைகளின் வளர்ச்சியே மனிதனுடைய இறப்பு வரை அவனுடைய அறிவுப்பெருக்கத்திற்கும், வளமான வாழ்வுக்கும் வழிகாட்டும் சாதனமாக அமைந்தது. தற்காலக் கருத்தின் அடிப்படையிலே இந்த ஆவணசாலைகளை 'நூலகங்கள்' எனக் குறிப்பிடுவதும் பொருத்தமானதே. ஒரு கால கட்டத்தில் அடையப்பெற்ற தொழினுட்ப, விஞ்ஞான-அறிவியற்துறைச் சாதனைகளின் பயன்பாடு இன்னொரு காலகட்ட மக்களுடைய உபயோகத்திற்கு எடுத்துக் கொடுக்கப்படுகின்றதென்றால் அங்கே இத்தகைய ஆவணச்சாலைகளின் அல்லது நூலகங்களின் பங்களிப்பு மிகப் பிரதானமானதாக அமையும். அவ்வகையிலேயே ஒவ்வொரு காலகட்டத்திலும் இருந்திருக்கக்கூடிய எழுத்து முறையுள்ள பேச்சுவழக்கு, மேலதிக உற்பத்திக்கு வேண்டிய தொழினுட்ப முறைகள், வளர்ச்சியடைந்து கொண்டிருக்கும் நகரங்களை நிர்வகிப்பதற்கு வேண்டிய சுகாதார-நிர்வாக சட்டங்கள் போன்ற விபரங்கள் ஆவணச்சாலைகளிலே அல்லது நூலகங்களிலே களஞ்சியப்படுத்திப் பாதுகாக்கப்பட்டன. இவ்வாறு குறிப்பிட்ட மையங்களிலே ஒன்று திரட்டப்பட்டு, பாதுகாத்து வைக்கப்பட்டிருந்த அறிவியற் கூறுகளே பின்பு உலகின் பல்வேறு பகுதிகளிலும் நாகரிகம் விரைந்து பரவுதற்கு வழிசமைத்தன. சுமேரிய, எகிப்திய, கிரேக்க நூலகங்களும் ரோம-அராபிய நாகரிக மையங்களும் உலகிலேயே மிகப்பெரிய புராதன அறிவியல் மையங்களாக -ஆரம்ப நூலகங்களாக- நாகரிகமடைந்த மனிதனை சிந்தனைக்கும் செயற்திறனுக்கும் பயிற்சி கொடுத்த களங்களாக செயற்பட்டிருந்தன.

இத்தகைய பயிற்சிக்களங்களிலே மக்கள் ஒன்றுகூடி வழிபாடு இயற்றும் மடாலயங்கள் அல்லது சமயத்தலங்களே நூலகங்களாகவும் ஆரம்பத்தில் பணியாற்றின[1]. தென்னாசியாவைப் பொறுத்தமட்டிலே கோயில்களே மக்களுடைய வாழ்வு முறையின் உயிர்நாடியாக விளங்கியமை போன்று, அவை ஆற்றிய பல்வேறு தொழிற்பாடுகளின் ஒரு வடிவமான நூலகங்களாகவும் விளங்கின எனலாம். இந்தியாவைப் பொறுத்த மட்டிலே பௌத்த சமயத்தின் தோற்றமும் அதன் பரவலுமே இந்திய நூலகத் தொழிற்பாட்டின் வரலாற்றில் முக்கிய சம்பவமாக அமைந்தது. விகாரைக் கல்விப் போதனாமுறையின் வளர்ச்சியுடனேயே பௌத்த மடாலயங்களிலோ அல்லது விகாரைகளிலோ மரபுகளையும், ஐதீகங்களையும், புராண இதிகாசக் கதைகளையும் ஏட்டுச் சுவடிகளையும் பேணிப்பாதுகாத்து வைக்கும் வழக்கம் தோற்றம் பெற்றது[2].

கல்வி வளர்ச்சியும் நூலகத்தின் தோற்றமும் ஒன்றோடு ஒன்று இணைந்தவையாக விருப்பதனால் இந்தியாவில் நூலக நடவடிக்கைகள் பற்றி ஆராயுமொருவர் அங்கு கல்வித்துறையில் ஏற்பட்டிருந்த படிப்படியான மாற்றங்களையும் ஆராய வேண்டிய வராகின்றார். ஆகையினால் கல்விச்சாலைகள் அமைந்துள்ள மையங்கள் எல்லாவற்றிலுமே நூலகங்களும் அமைக்கப்பட்டு மாணவர்களுடைய கல்வி வளர்ச்சியின் மேம்பாட்டிற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என்பதல்ல. பண்டைய இந்தியாவிலே கல்விமுறையானது குரு-சிஷ்ய முறையினடிப்படையில் பேணப்பட்டு வந்தமை காரணமாக இடைநிலைக் கல்வி வரைக்கும் நூலகங்களிலே மாணவர் தங்கியிருக்க வில்லை. குருவே நூலகமாகவும், ஆசிரியனாகவும் வழிகாட்டியாகவும் தொழிற்பட்டிருந்தார். ஆனால் உயர்கல்வி நிறுவனங்களிலெல்லாம் நூலகங்கள் நிறுவப் பட்டு ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தனவென்பது தெளிவு[3]. இவ்வாறான உயர்கல்வி நிறுவனங்களில் பிராமணரே அதிக செல்வாக்குடையவர்களாக விளங்கி யிருந்தனர். ஏனெனில் இந்திய வாழ்வு முறையானது 'வருணாச்சிரம தர்ம முறையை' அடிப்படையாகக் கொண்டமையினால் சமூகத்தின் முதல் மூன்று நிலைகளான சத்திரியர், பிராமணர், வைசியர் என்ற வர்ணத்தார்க்கே கல்வி உடைமையாகக் கொள்ளப்பட்டது. சமஸ்கிருத மூலக் கல்வி பிராமணர்க்கு மேலும் சுலபமாக செல்வாக்கினைப் பெற்றுக் கொடுத்ததிலும் வியப்பில்லை. இதனாலேயே பிராமணர் கல்வி கற்ற வகுப்பினராகவும் உயர்கல்வி நிலையங்களை நிர்வகிப்பவர்களாகவும், நூலகங்களைப் பேணிப்பாதுகாப்பவர்களாகவும் விளங்கினர்.

இந்தியாவிலே காந்தாரம், மதுரா ஆகிய மையங்களிலும் நாலந்தா போன்ற பல்கலைக்கழகங்களிலும் அவற்றுடன் தொடர்பான நூல் நிலையங்கள் நீண்ட கால மாக நிலைபெற்றிருந்தன. வடமேற்கிந்திய நகரான காந்தாரத்திலே ( Gandhara School )உள்ள சிற்பக்கலைக் கூடத்தில் இந்தோ-கிரேக்க-ரோம சிற்பக்கலை தொடர்பான சிற்ப சாஸ்திரங்களும் உருவக நூல்களும் காலங்காலமாக சேகரித்து வைக்கப்பட்டிருந்தன. இதே போன்று வட மதுரா நகரிலேயுள்ள சிற்பக்கலைக்கூடத்திலே இந்தியாவுக்கேயுரிய சிற்பக்கலை தொடர் பான சில்பசாஸ்திரங்களும், மனையடி சாஸ்திரங்களும் பேணிவைக்கப்பட்டிருந்தன.

நாலந்தாப் பல்கலைக்கழகத்திலே பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயின்றனர் எனக்குறிப்பிட்ட பாகியான் என்னும் சீன யாத்திரிகன் அங்கே தங்கி பௌத்த தத்துவம் தொடர்பான ஆய்வுகளையும் மேற்கொண்டதாகக் குறிப்பிட்டுள்ளார். தென்னிந்தியாவைப் பொறுத்தமட்டிலே சோழப் பேரரசின் எழுச்சிக்கு முன்னர் காஞ்சியிலே மிகப்பெரிய பல்கலைக்கழகம் ஒன்று உருவாகியிருந்தமையை வரலாற்று மூலாதாரங்கள் வாயிலாக அறியமுடிகிறது. காஞ்சிக் கடிகையிலே பௌத்த-இந்து தத்துவங்கள் தொடர்பான ஏட்டுச்சுவடிகள் யாவும் பேணிவைக்கப்பட்டிருந்தன. தென்கிழக்காசியா, சீனா ஆகிய நாடுகளிலிருந்து ஆய்வாளர்கள் வந்து காஞ்சிக்கடிகையில் தங்கி கல்வி கற்பது மரபாக இருந்து வந்தது.

## சரசுவதி பண்டாரங்கள்:

தமிழ் நாட்டிலே சோழப் பேரரசின் தோற்றமும் வளர்ச்சியும், அந்நாட்டின் பல்வேறு துறைகள் பொலிந்து ஒரு திருப்புமுனையாக அமைந்தமை போன்று, ~~நூலக கல்வி~~ நடவடிக்கைகளிலும் ஒரு திருப்புமையமாக அமைந்தது என்றல் மிகையாகாது. சோழர் காலத்து தமிழ் நாட்டிலே கல்வி உன்னத நிலையிலிருந்ததென்பதனை அக்காலத்திலே தோற்றம் பெற்ற பெருந்தொகையான இலக்கியங்களும் மெய்க்கீர்த்திச் சாசனங்களும் எடுத்துக்காட்டுகின்றன. சாசன ஆவணங்களிலே அடிக்கடி இடம்பெறுகின்ற 'சரசுவதி பண்டாரம்'[4] அல்லது 'சரசுவதி பண்டாரங்கள்' என்ற பிரயோகங்களானவை சோழர் காலத் தமிழகத்திலே காணப்பட்டிருக்கக்கூடிய நூலகத்தினையே குறிப்பிட்டு நின்றது எனக்கொள்ளலாம். இந்திய மரபின்படி சரஸ்வதி கல்விக்குரிய கடவுளாக உருவகிக்கப்பெற்று வழிபடப்பெற்று வருவதனை நாம் அறிவோம். அந்த வகையில் 'சரஸ்வதி பண்டாரங்கள்' எனக் குறிப்பிடப்பட்டவை தஸ்தாவேஜுகளையும் ஏட்டுச்சுவடிகளையும் ஒருங்கே கொண்டுள்ள நூலகங்களையே கருதின எனக்கொள்ளலாம். சில வேளைகளில் தற்காலத்தில் நாங்கள் குறிப்பிடும் 'நூலகர்' என்ற பொருளினையும் 'சரசுவதி பண்டாரம்' என்ற பிரயோகம் குறித்திருக்கக்கூடிய வாய்ப்பு உண்டு. 'சமய நூல்கள் அல்லாமல், சிறப்பு மிக்க இலக்கண இலக்கியங்களின் சுவடிகளும் கோயிலில் இருந்த "சரசுவதி பண்டாரங்களால்" போற்றிக் காக்கப்பட்டன,'[5] என்று குறிப்பு வரும்போது அங்கே பதவிக்குரிய ஒரு பெயராகவே அப்பிரயோகம் அமைவதனைக் காண முடிகின்றது.

## நம்பியாண்டார் நம்பி - ஒரு நூலக விஞ்ஞானி.

முதலாம் இராசராசனது ஆட்சிக் காலத்திலே (985-1014) இதுவரைக்கும் சரஸ்வதி பண்டாரங்களிலே வகைப்படுத்தப்படாத சேமித்தும், பாதுகாத்தும் வைக்கப்பெற்றிருந்த ஏட்டுச்சுவடிகள் எல்லாவற்றையும் வகையீடு ( Catalogue ) செய்யும் பொறுப்பினை அக்காலத்திலே நூலக விஞ்ஞானத்திலே நன்கு தேர்ச்சி பெற்றிருந்த திருநாரையூர் நம்பியாண்டார் நம்பி என்பவரிடம் மாமன்னன் இராசராசனாலேயே ஒப்படைக்கப்பட்டது. இசை இலக்கியத்திலும் நன்கு புலமை கொண்டிருந்த

நம்பியாண்டார் நம்பி, தில்லையம்பலத்திலே பல்லவராட்சிக்காலம் தொடக்கம் சேமித்துப் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த தேவாரத் திருப்பதிக ஏடுகளை மிகவும் நுணுக்கமான வகையீடு செய்து, அவற்றினை Author catalogue என்பதனடிப்படையிலே 12 திருமுறைகளாக வகுத்து மாணவர்களும் மக்களும் பாவிப்பதற்கென சரஸ்வதி பண்டாரங்களிலே ஒழுங்குபடுத்தி வைப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டார். இவ்வாறு பல ஆண்டுகட்கு முன்பே சைவ மத ஆர்வ மாட்சிமையாக வளர்ந்த இலக்கியம் இராசராசன் காலத்தில் உயிர்-துலக்கம் பெற்று வாழும் இலக்கியமாக, வளர்கின்ற இலக்கிய உணர்வுக்கு வழி-சமைத்ததமை போன்று ஒரு நூலக வடிவினைப் பெற்றது. அவ்வகையில் நம்பி-யாண்டார் நம்பி, ஒரு நூலகருக்குரிய தொழிற்பாட்டினையும் ஆற்றினார் எனக் குறிப்பிடலாம்.

சோழர் காலக் கல்வெட்டுக்கள் - மெய்க்கீர்த்திகளிலே நூலக நடவடிக்கைகள் பற்றிய குறிப்புக்கள்:

---

கல்வி வளர்ச்சியும் நூலக நடவடிக்கைகளும் ஒன்றுடன் ஒன்று இணைந்திருந்தமையால் கல்வி தொடர்பாக சோழர் காலக் கல்வெட்டுக்களிலும், மெய்க்கீர்த்திகளிலும் இடம்பெறும் செய்திகளை அடிப்படையாகக் கொண்டு அக்கால நூலக நடைமுறைகளை ஆராய்வது பொருத்தமாகும். சோழப் பேரரசர்கள் காலத்திலே தமிழ் நாட்டில் கல்வி நன்கு வளர்ச்சியடைந்திருந்தது என்பதற்கு வரலாற்றுச் சான்றுகளுள. கல்விக்காக சோழர் காலத் தமிழகத்திலே பலர் தானம் கொடுத்த செய்திகளும் அதன் பொருட்டு செய்யப்பட்ட வியவஸ்தைகளும் (பிரமாணங்களும்) சாசனங்-களிலே பொறிக்கப்பட்டுள்ளன. பரந்திருந்த சோழப் பேரரசிலே அரசாங்க சேவைகளுக்காக உத்தியோகத்தர்களைத் தெரிவு செய்யும் போது அவர்களுடைய கல்வித்தகைமைகள் கருத்திற்கெடுக்கப்பட்டன. இவ்வாறான சந்தர்ப்பங்களிலிருந்து சோழர் காலத்திலேயிருந்த கல்வி நிலையங்கள் பற்றியும், பல்கலைக்கழகங்கள் பற்றியும், நூலகங்கள் பற்றியும் அறிய முடிகின்றது.

முதலாம் பராந்தகச் சோழனுடைய 12ம், 14ம் ஆட்சியாண்டுக்குரிய உத்தரமேரூர்க் கல்வெட்டுக்களிலே கொடுக்கப்பட்ட கல்வித் தகைமைகள் பற்றிய குறிப்புக்கள் சோழர்காலத்திய நூலக ஆய்வுக்குப் பெரிதும் உதவக்கூடியவை.

> " அறுபது பிராயத்திற்கு உள் முப்பது பிராயத்திற்கு மேல் பட்டார் வேதத்திலும் சாஸ்திரத்திலும் காரியத்திலும் நிபுணர் எனப் பட்டிருப் பாரை......."

> " எழுபது பிராயத்தின் கீழ் முப்பத்தைந்து பிராயத்தின் மேற்படாதார் மந்திரப் பிரமாணம் வல்லான்
>
> ஒதுவித்து அறிவானை குடவோலை இடுவதாகவும்
> அரைக் காணில மேயுடை. யானுமிரும் ஒருவேதம்
> வல்லான் ஆய் நாலு பாஷ்யத்திலும் ஒரு
> பாஷ்யம் வக்கணித்து அறிவான்...."

(முதலாம் பராந்தகனது 12ம், 14ம் ஆட்சியாண்டுக்குரிய உருத்திர மேரூர்க் கல்வெட்டுக்களிலிருந்து)

" மூல பருடைஃயர் எழுதின வியவஸ்தை இவ்வூருடையார் திருவீர வீஸ்வர முடையார் கோயில் திருநடைமாளிகையிலே இப்படிக் கல்வெட்டக் கடவதாக நிச்சயித்து இப்படி வியவஸ்தை பண்ணினோம்"

(மூன்றும் இராசராசனது 30ம் ஆட்சியாண்டுக்குரிய சேய்நலூர்க் கல்வெட்டிலிருந்து)

"ஜனநாதன் மண்டபத்தில் றிக் வேதம் ஒதுவிப்பான் ஒருவனுக்கு நாள் ஒன்றுக்கு நெல் பதக்கும் யசுர் வேதம் ஒதுவிப்பான் ஒருவனுக்கு நாள் ஒன்றுக்கு நெல் பதக்கும் இவர்கள் இருவருக்கும் பேரார் காசு நாளாகக் காசெட்டும் வியாகரணமும் ருபாவதாரமும் வக்கணிக்கும் பாட்டன் ஒருவனுக்கு நாளொன்றுக்கு நெல்தூணியும் காசு பத்தும ரிக் வேதமோதும் பிராமணர் பதின்மரும் வியாகரமும் ருபாவ தாரமுங் கேட்கும் பிராமணரும் சாத்திரர் இருபதின்மரும்.."

(வீரராசேந்திரனின் திருமுக்கூடல் கல்வெட்டிலிருந்து)

"இம்மண்டபத்துண்ணுஞ் சாத்திரர்களுக்கும் சிடைகளுக்கும் பணி செய்யும் பெண்டுகள் இருவருக்கும் பேரால் நெல்லு நாழியாக நாள் ஒன்றுக்கு நெல் குறுணியும் பேரார் காசொன்றாகக் காசு இரண்டும்சாத்திரர்க்கும் சிடைகளுக்கும் ஆதுலர்க்கும் கிடக்கப் பாய் எழுபத்தைஞ்சுக்கு காசு இரண்டும் சிடைகளுக்கும் சாத்திரர்க்குந் தடை கட்டச் சனி ஒன்றுக்கு எண்ணெய்......"

(வீரராசேந்திரனின் திருமுக்கூடல் கல்வெட்டிலிருந்து)

மேலே கொடுக்கப்பட்ட சாசனப் பகுதிகளிலே இடம்பெறும் பதங்களான சாத்திரர், சிடைகள் என்பன முறையே அறிஞரையும் மாணவர்களையும் குறித்து நிற்கின்றன. ஆதுலர் சாலை என்று குறிப்பிடப்படும் வைத்தியசாலையுடன் இணைந்ததாகவே வீரசோழன் மண்டகத்திலே சரஸ்வதி பண்டாரமும் அமைந்திருந்தது என்பது தெளிவு. இதிலிருந்து கல்வி பயிற்றுவிக்கும் பயிலும் ஆசிரியர்களுக்கும் மாணக்கர்களுக்குமுரிய நாளாந்த, வருடாந்த தேவைகளை சாசனத்திலே கணக்கிட்டுப் பொறித்திருப்பது வியக்கத்தக்கதாகும்.

"அந்நாளில் பார்ப்பனர்கள் வேதங்களிலும் சாத்திரங்களிலும் வல்லுநராயிருந்தமையோடு இரவில் அம்பலங்களிலாதல், திருக்கோயில் மண்டபங்களிலாதல் அமர்ந்து வடமொழியிலுள்ள மகாபாரதம், பதினென் புராணங்கள், முதலானவற்றைப் படித்துப் பொதுமக்கள் உணர்ந்து கொள்ளுமாறு பொருள் வாழ்ந்து வந்தனர் என்று தெரிகிறது. அவர்களுடைய வடமொழிப் புலமையையும் சீலத்தையுங் கண்டு மகிழ்வெய்திய பொதுமக்கள் அன்னோரின் நல்வாழ்வின் பொருட்டு ஊர்ப் பொது நிலங்களுள் சிலவற்றை வேதவிருத்தி, பட்டவிருத்தி, பாரத விருத்தி, புராண விருத்தி என்ற பெயர்களோடு இறையிலி நிலங்களாக அவர்கட்கு வழங்கிப் பெரிதும் ஆதரித்து வந்தனர் என்பது பல கல்வெட்டுக்களால் நன்குணரக் கிடக்கின்றது...." [6]

இங்கு வேதவிருத்தி, பட்டவிருத்தி, பாரதவிருத்தி, புராணவிருத்தி என்ற பிரயோகங்களில் இடம்பெறும் 'விருத்தி' என்பது புலமைப்பரிசிலினையே குறிப்பிட்டு நிற்கின்றது. அவ்வகையில் ஆலயங்களின் தொழிற்பாடு எந்தளவிற்கு சோழர் காலத்திலே இருந்திருக்கும் என்பதனையும் கண்டு தெளியலாம்.

முடிவுரை.

பொதுவாக சோழர் காலக் கல்வி நிலையினையும் அவை தொடர்பாக சாசனங்களிலே இடம்பெற்ற செய்திகளையும் நோக்கும்போது தமிழ் நாட்டிலே பாரிய அளவிலே நூலகத்துக்குரிய நடைமுறைகள் பின்பற்றப்பட்டிருந்தன என்பதனையுணரலாம். சோழர் காலத்தெழுந்த கம்பராமாயணம், கலிங்கத்துப்பரணி, உலா, கோவை, பிள்ளைத்தமிழ் போன்ற இலக்கியங்கள் அக்காலத்து நூலக நடைமுறைகளைப் பிரதிபலிக்கின்றன எனத் துணிந்து கூறலாம். சாசனங்களை மேலும் ஆழமாக ஆராய்ந்து செல்வோமாயின் நூலகங்கள் எவ்வாறு இயக்கம் பெற்றிருந்தன என்பதனைக் கூட அறியமுடியும்.

அடிக்குறிப்புக்கள்.

1. இலங்கையிற் கல்வி, பகுதி 1, நூற்றாண்டு விழாமலர், பக். 267, 1969.
2. சந்தானம், எஸ். கல்விவரலாறு (முதற் பகுதி) பக். 30, 1976.
3. மேற்படி.
4. Sircar, D.C. Indian Epigraphical Glossary. P. 301.
   Sarasvati - bhāndāra => a library
   Sarasvati - bhāndārika => Librarian.
   இராசமாணிக்கனார், மா, கல்வெட்டுக்களில் அரசியல், சமயம், சமுதாயம். பக். 109, 1977.
   " சரஸ்வதி பண்டாரம்: கோவில்களிலும் மண்டபங்களிலும் நூல்நிலையங்கள் இருந்தன என்பது சில கல்வெட்டுக்களால் தெரிகின்றன. (218 1901) இத்தகைய நூல்நிலையங்கள் இருந்திராவிடில், இன்று நாம் காணும் பழந்தமிழ் நூல்கள் பாதுகாக்கப்பட்டிரா அன்றோ? தஞ்சையை ஆண்ட நாயக்க மன்னர்கள் பேணி வளர்த்த நூல்நிலையமே அவர்க்குப் பின் வந்த மகாராட்டியர்களால் வளர்க்கப்பட்டது. அதுவே இன்று தஞ்சை அரண்மனையிலுள்ள சரஸ்வதி மகாலில் இருக்கும் பெரிய நூல் நிலையமாகும்.
5. திருநாவுக்கரசு, க.த. முதலாம் இராசராசசோழன், பக். 269, 1975.
6. சதாசிவ பண்டாரத்தார், ரி.வி. பிற்காலச் சோழர் சரித்திரம் பகுதிIII, பக். 94.

********

# நூலக தகவற் சேவை வலயங்கள்.

-திருமதி. ந.பாக்கியநாதன்.
உதவி நூலகர்/மருத்துவபீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

இருபதாம் நூற்றாண்டில் உலகரீதியாக ஏற்பட்ட விஞ்ஞான, தொழில்நுட்ப வளர்ச்சியின் விளைவாக நூலகங்கள்/தகவற்சேவை நிறுவனங்கள் அனைத்தும் நவீனமயமாக்கப் பட்டுவரும் இக்காலகட்டத்தில், நூலக தகவற்சேவையின் முக்கியத்துவம் எல்லோராலும் உணரப்பட்டுள்ளது. உலகெங்கிலும் ஏற்பட்ட நான்கு மாபெரும் உத்வேகங்களான சனத்தொகை அதிகரிப்பு, கல்வி அபிவிருத்தி, நூலக சாதனங்களின் அளப்பரிய வளர்ச்சி, , தகவற் சேவையின் வியக்கத்தகு முன்னேற்றம் ஆகியன தகவற் சேவைப் பணியில் கணிசமான தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளன. இதன் பெறுபேறாக படித்தோர் முதல் பாமரர் வரை தத்தம் அன்றாட தேவைகளுக்கும் முன்னேற்றத்திற்கும் புதுப்புத்தகவல்களையே எதிர்பார்த்து நிற்கின்றனர். இவர்கள் அனைவரினதும் பலதரப்பட்ட தேவைகளையும் வழங்கக் கூடியவை தகவல்சேவை நிறுவனங்களும் நூலகங்களுமேயாகும்.

இப்படியான சூழ்நிலையில் எந்த ஒரு தனிநூலகமோ, தகவற்சேவை நிலையமோ தனது பாவனையாளர்களினது பல்வேறு தேவைகளையும், முழுமையாகவும் திருப்திகரமாகவும் வழங்க முடியாத நிலைக்குள்ளாக்கப்பட்டுள்ளது. வாசகர்களினது தொடர்ச்சியான நூலகபாவனை, நூல்கள், நூலகவியலிலான சாதனங்களின் பிரமிக்கத்தக்க அதிகரிப்பு, உயர்ந்த மட்டத்தில் நூலகசேவையின் பயன்களை எதிர்பார்த்து நிற்கும் நூலக அதிகார பீடங்கள் ஆகிய அனைத்தும் நூலக சிந்தனையாளர்களைக் கூட்டுறவு ரீதியிலான நூலக அமைப்பு முறையினை மேற்கொள்ளச் செய்தன. இந்த இக்கட்டான நிலைமையினைச் சமாளிக்க நூலகவியற் தொழில்நுட்பங்களில் ஒன்றாக நூலகக் கூட்டுறவு தற்கால நூலகங்களுக்கோர் வரப்பிரசாதமாகத் தோன்றலாயிற்று. இவை காலப்போக்கில் பலதரப்பட்ட நூலக சேவைகளிலும் பல்வேறு நிலைகளிலும் சர்வதேச, தேசிய, பிரதேச, உள்ளூர் ரீதியாக ஆரம்பிக்கப் படலாயின.

இவ்வாறு தனிப்பட்ட நூலகங்களின் நலனுக்காக ஆரம்பிக்கப்பட்ட இக்கூட்டுறவு முறையானது வளர்ச்சியடைந்த, வளர்ச்சியடைந்துவரும் நாடுகள் யாவற்றிலும் தேசிய ஒன்றிணைந்த நூலக தகவல் கூட்டுறவு வலயங்களாக உருவெடுத்தன. ( National Cooperative Library Information Network - NCLIN. )இதன் பிரதான நோக்கம், பல்வேறு வகையில் நூலகங்களின் சேர்க்கைகளையும், சேவைகளையும் ஒருங்கிணைத்து ஓர் அங்கமாகச் செயற்படுவதாகும்.

இத்தகையதோர் பாரிய முயற்சியினை இலங்கையில் முதன் முதலாக ஆரம்பித்த பெருமை இயற்கைவள, சக்தி விஞ்ஞான அதிகாரசபைக்கே ( NARESA )உரியதாகும். இதன் செயற்பாடுகளனைத்தும் அதனது தகவற்சேவை நிறுவனமாகிய இலங்கை விஞ்ஞான தொழில்நுட்ப தகவல் நிலையத்தினால்( Sri Lanka Scientific and Technical Information Centre- SLSTIC ) மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இது தனது கூட்டுறவு அமைப்பின் கீழ் பல்வேறு துறையினருக்கு உகந்த பல தகவல் வலயங்களை உருவாக்கி சர்வதேசரீதியாக இணைந்து செயற்படும் ஒரு தேசிய நிறுவனமாக விளங்குகின்றது.. இதில் ஓர் அங்கமே இலங்கைச் சுகாதாரவியல் நூலக தகவற் சேவைகள் வலயமாகும்.

இத்தகவல் வலயமானது உலக சுகாதார நிறுவனத்தின் ஆதரவின் கீழ வளர்முக நாடுகளுக்கான தகவல் திட்டத்தின் ஒன்றாக 1979ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இவ்வலயத்தில் தற்பொழுது பதினேழு மருத்துவம்/மருத்துவ சார்புள்ள நூலகங்கள் அங்கம் வகிக்கின்றன. கொழும்புப் பல்கலைக்கழக மருத்துவ நூலகம் இவற்றின் நடவடிக்கைகளை ஒன்றிணைத்துச் செயற்படும் மையநூலகமாக விளங்குகின்றது. இதன் அமைப்பும், பங்குபற்றும் நூலகங்களின் விபரங்களும் வரைபட மூலம் பின்னிணைப்பிற் கொடுக்கப்பட்டுள்ளது. இதன் நோக்கங்கள், நாட்டிலிருக்கும் தகவல் வளங்கள் அனைத்தினையும் ஒருங்கிணைப்பதும் உலக நாட்டு நூலகங்களிலுள்ள சேர்க்கைகளையும்/தகவல்களையும் எளிதில் பெற்று, கூடிய பாவனையாளர்களுக்கு வழங்குவதுமாகும்.

இதனது நடவடிக்கைகள்:

(அ) நூலகங்களுக்கிடையிலான இரவல் வழங்கும் திட்டம்.

இத்திட்டத்தின் கீழ் மைய நூலகமும் பங்குபற்றும் நூலகங்களும் இலங்கையிலுள்ள மருத்துவ நூலகங்களில் பெறமுடியாத மருத்துவம், சுகாதாரம் சம்பந்தமான புத்தகங்கள், பருவ இதழ்கள், பருவ இதழ்களில் பிரசுரிக்கப்படும் கட்டுரைகள் போன்றவற்றினை இலவசமாகப் பெறும் வாய்ப்பினைப் பெறுகின்றன. இவ்வாறாகப் பெறப்படும் ஆவணங்கள் அனைத்தும் மைய-நூலகத்தூடாக உலக சுகாதார ஸ்தாபனத்தின் தென்கிழக்காசிய பிரதேசக்கிளை மூலம் ( WHO / SEARO ) தருவிக்கப்படுகின்றன. இவை தென்கிழக்காசிய நாட்டு நூலகங்களில் இல்லாதபட்சத்தில் ஐக்கிய அமெரிக்க நாட்டின் தேசிய மருத்துவ நூலகத்திடமிருந்து பெற்றுக் கொடுக்கப்படுகின்றன.

(ஆ) மருத்துவவியற் சாதனங்களை ஆராய்தலும், தகவல் மீட்டல் அமைப்பின் வசதிகளும். -( MEDLARS - MEDLINE FACILITIES )

வளர்ச்சியடைந்த நாட்டு நூலகங்கள் அனைத்தும் கணனிமயமாக்கப்பட்டு அவற்றின் நூலக சேவைகள் துரிதமாக்கப்பட்டு வரும் இவ்வேளையில் நம் நாட்டு நூலகங்களும் அதன் பயனை ஒரு சிறிய விகிதாசாரத்தில் நுகரக்கூடிய வாய்ப்பினை இத்தகவல் வலயத்தில் பங்குபற்றும் நூலக பாவனையாளர்களுக்கு இத்திட்டம் அளிக்கின்றது. மருத்துவ நூலகபாவனையாளர்கள்/ஆராய்ச்சியாளர்களின் தேவைகளுக்கான மேற்கோள்களின் கணனிப்பிரதிகள் நேரடியாகவும் இலவசமாகவும் கிடைக்கின்றன.

MEDLARS -என்பது மருத்துவியற் சாதனங்களை ஆராய்தலும், தகவல் மீட்டல் முறையும் ஆகும்.

MEDLINE -(MEDLARS ON - LINE ) - என்பது இத்தகவல் அமைப்பின் தகவல் தளமாகும். இது 3,000 சஞ்சிகைகளிலுள்ள 50,000த்திற்கும் மேற்பட்ட கட்டுரைகளின் மேற்கோள்களை உள்ளடக்கியுள்ளது.

மருத்துவ சம்பந்தமாக அண்மைக்காலத்தில் வெளியிடப்படும் தகவல்களை அது சார்ந்த நிபுணர்களுக்கு உதவும்முகமாகவே உருவாக்கப்பட்டதாகும். இது மருத்துவ உலகில் சர்வதேச அந்தஸ்தைப் பெற்ற தகவல் தளமாகும். இத்தகவல் தளமானது மருத்துவ அட்டவணை ( Index Medicus. )யிலுள்ள தகவலின் அடிப்படையிலேயே அமைக்கப்பட்டுள்ளது. இத்தகவல் வலை நூலகங்கள் தங்களது பாவனையாளர்களுக்குத் தேவையான தகவல்களை உலக சுகாதார ஸ்தாபனத்தின் தென்கிழக்காசியப் பிராந்தியக் கிளை மூலம் இலவசமாகப் பெற்றுக் கொடுக்கின்றன. இச்சேவையானது சமீப காலத்தில் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்ட போதிலும் அதனை மீண்டும் ஆரம்பிக்க உலக சுகாதார ஸ்தாபனம் முயற்சி எடுத்து வருகின்றது.

(இ) இலங்கை கெலின் நூலகங்களிலுள்ள சுகாதார விஞ்ஞான சஞ்சிகைகளின் ஒன்றிணைந்த பட்டியல்.

இப்பிரசுரமானது இத்தகவல் வலயத்தின் தேசிய மையநூலகமாகிய கொழும்பு பல்கலைக்கழக மருத்துவநூலக உதவி நூலகரால் தொகுத்து வெளியிடப்படுகின்றது. இவ்வலயத்தில் பங்குபற்றும் நூலகங்களினால் அனுப்பப்படும் சஞ்சிகைகளின் பட்டியல்களின் உதவியைக் கொண்டே இப்பிரசுரம் தயாரிக்கப்படுகின்றது.

(ஈ) இலங்கை சுகாதார விஞ்ஞான நூலகங்களுக்கான வழிகாட்டி:

இவ்வழிகாட்டியானது சுகாதார விஞ்ஞான சார்புள்ள நூலகங்களிலுள்ள விசேட நூலக சேர்க்கைகளையும், அங்கே வேலை செய்யும் நூலக சேவையாளர்களின் விபரங்களையும் அறிய உதவுகின்றது. இவ்வெளியீடானது களுத்துறையிலுள்ள தேசிய சுகாதார விஞ்ஞான நிறுவனத்தினால் வெளியிடப்படுகின்றது.

(உ) சுகாதார விஞ்ஞான ஆராய்ச்சி இலங்கை அட்டவணைப்படுத்தற் சேவை:

தேசிய மைய நூலகமானது இலங்கை சுகாதார சேவைகள் ஆராய்ச்சி தகவல் வங்கி ஒன்றினை இத்தகவல் வலயத்தின் ஓர் அம்சமாக ஆரம்பித்துள்ளது. இப்பாரிய திட்டத்திற்கு அரசரணையாகவே இவ்வட்டவணைச் சேவை உருவாக்கப்பட்டுள்ளது. இச்சேவையின் பிரதான நோக்கம், மருத்துவ விஞ்ஞான சேவைகள் ஆராய்ச்சியில் வெளியிடப்பட்ட/வெளியிடப்படாமலிருக்கும் ஆராய்ச்சித் திட்டங்களின் அறிக்கைகளை ஒன்று சேர்த்தலும் அட்டவணைப்படுத்தலுமாகும். இதன் தொடர்பாக தேசிய சுகாதார நிறுவனமானது ஓர் காலாண்டு புதினச்சஞ்சிகையொன்றினையும் வெளியிடுகின்றது.


(ஊ) உபகரணங்களும்/தளபாடங்களும்:

இத்தகவல் வலயத்தின் மூலம் உலக சுகாதார ஸ்தாபனம், கெலின் நூலகங்களுக்கு மேற்குறிப்பிட்ட தேவைகளுக்காக வருடா வருடம் ஓர் குறிப்பிட்ட நிதியினை ஒதுக்குகின்றது.

இலங்கையில் இத்தகையதோர் அமைப்பினால் வளர்ச்சியடைந்த, வளர்ச்சியடைந்துவரும் மருத்துவ/மருத்துவசார்புள்ள நூலகங்கள் தங்கள் நூலக சேவைகளை வளம்படுத்தி மென்மேலும் வளரச்செய்யும் பெரும் வாய்ப்பினைப் பெறுகின்றன.

---

## ஹெலிஸ் தகவல் வலயத்தின் அமைப்பு.



## சுருக்கக் குறிப்புகளுக்கான விளக்கம்.

### அ. உலக சுகாதார ஸ்தாபன பிராந்திய அலுவலகங்கள்.

WHO / HQ - உலக சுகாதார ஸ்தாபனம், தலைமை அலுவலகம்

AFRO - ஆபிரிக்காவுக்கான பிராந்திய அலுவலகம்.

AMRO - அமெரிக்காவுக்கான பிராந்திய அலுவலகம்.

EMRO - கிழக்கு மத்தியதரை நாடுகளுக்கான பிராந்திய அலுவலகம்.

EURO - ஐரோப்பாவுக்கான பிராந்திய அலுவலகம்.

SEARO - தென்கிழக்காசியாவுக்கான பிராந்திய அலுவலகம்.

WPRO - மேற்கு பசுபிக் நாடுகளுக்கான பிராந்திய அலுவலகம்.

### ஆ. பங்கு கொள்ளும் நூலகங்கள்/தகவற் சேவை நிறுவனங்கள்.

BMARI - பண்டாரநாயக்கா ஞாபகார்த்த ஆயுர்வேத ஆராய்ச்சி நிறுவனம்.

D O H - தொழில் சார் சுகாதாரப் பிரிவு (தொழில் திணைக்களம்)

H E B - சுகாதாரக் கல்வியகம் (கல்விப்பணியகம்)

GWAV - கம்பஹா விக்கிரமாராச்சி ஆயுர்வேத வித்தியாலயம்.

I I M - சுதேச வைத்திய நிறுவனம்.

M.R I - மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம்.

NARESA - இலங்கை இயற்கைவள, சக்தி, விஞ்ஞான அதிகார சபை.

NIHS - தேசிய விஞ்ஞான சுகாதார நிறுவனம்.

PGIM - பட்டமேல் மருத்துவப் படிப்பு நிறுவனம்.

P I C - சனத்தொகைக் கணிப்பு நிலையம்.

SLML - ஸ்ரீ லங்கா மருத்துவ நூலகம்.

U C (M) - கொழும்புப் பல்கலைக் கழகம் (மருத்துவ நூலகம்)

U J (M) - யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் (மருத்துவ நூலகம்)

U P (M) - பேராதனைப் பல்கலைக் கழகம் (மருத்துவ நூலகம்)

U R (M) - ருகுணைப் பல்கலைக் கழகம் (மருத்துவ நூலகம்)

******

# இலங்கையில் நூலகக் கல்வி: ஒரு வரலாற்று நோக்கு

திருமதி. விமலா பாலசுந்தரம்,
உதவி நூலகர்,
யாழ். பல்கலைக்கழகம்.

ஒரு நாட்டின் பண்பட்ட சமுதாயத்தினை உருவாக்குவதற்குக் கல்வி நிறுவனங்கள் எவ்வளவிற்கு உதவுகின்றனவோ, அதே போன்ற பங்களிப்பினையே நூலகங்களும் ஆற்றி வருகின்றன. சிறு வயது முதல் மாணவர்களுக்கு அறிவுத்துறையில் ஆர்வத்தையும் அறிவையும் ஊட்ட அக்கறை எடுக்கும் ஓர் ஆசிரியனைப் போலவே நூலகமும் சேவையாற்ற வேண்டியுள்ளது.

அபிவிருத்தியடைந்த நாடுகளில் நூலகங்கள் வளர்ச்சியுற்ற நிலையிற் சிறந்த சேவையினை நல்கி வருகின்றன. இதற்கு அந்நாடுகளின் நிதி வசதி மட்டும் காரணமெனக் கூறமுடியாது. அந்நாடுகளில் நூலகக் கல்வித் துறையில் ஏற்பட்டுள்ள துரித வளர்ச்சியே முக்கிய காரணமெனலாம். நூலகக் கல்வி வளர்ச்சி மூலம் சிறந்த முறையில் நூலக சேவையை நடாத்தக்கூடிய பயிற்சியும் -அது பற்றிய அறிவும் பெறப்படுகின்றன. வாசகரின் தேவை -அவற்றை வாசகருக்கு அளிக்கக்கூடிய ஒழுங்கு- நல்ல நிர்வாகம் என்பன நூலகக் கல்வி மூலம் பெறப்படுவதால், ஒரு நாட்டின் கல்வி வளர்ச்சியிலும் சமூக முன்னேற்றத்திலும் நூலகக் கல்வியின் அவசியமும் இன்றியமையாமையும் வலியுறுத்தப்படுகின்றன.

இலங்கையிற் புத்த சமயத்தின் வரலாற்றுடன் தொடர்புடையதாக நூலகங்களின் ஆரம்பம் பற்றிய செய்திகள் மஹாவம்சம், தீபவம்சம் முதலாம் நூல்களின் மூலம் அறியப்படுகின்றன. நாட்டில் அமைதி நிலவிய காலங்களில் மன்னர்கள் நூலக வளர்ச்சிக்கும், இலக்கிய ஆக்கங்களுக்கும் ஆதரவு நல்கியதாக இந்நூல்கள் சான்று பகர்கின்றன. அக்காலத்தில் கோயில்களைச் சார்ந்தும், அரண்மனைகளை அடுத்தும் நூலகங்கள் செயற்பட்டன.

ஈழத்துத் தற்கால நூலகங்களின் வளர்ச்சியினை நோக்கும் போது 1925இல் கொழும்பு மாநகரசபை நூலகம் தொடங்கப்பட்டமை முதற் கட்டமாக அமைகின்றது. அதனைத் தொடர்ந்து உள்ளூராட்சி மன்ற நூலகங்கள், பல்கலைக்கழக நூலகங்கள், பாடசாலை நூலகங்கள் விசேட நூலகங்கள் என்பனவும் ஆரம்பிக்கப்பட்டு துரித வளர்ச்சியடையத் தொடங்கின.

ஆரம்ப கால நூலகங்களைப் போலன்றி, இவற்றில் பல்வேறு வகையான ஆவணங்களும் இடம் பெற்றதோடு, அவற்றைப் பயன்படுத்த அணுகும் வாசகரின் தொகையும் அதிகரிப்பதாயிற்று. இந்நிலையில் நூலக உத்தியோகத்தர் நூலகவியல் சம்பந்தமான தெளிந்த அறிவினைப் பெற்றவர்களாகத் திகழ வேண்டியதன் அவசியமும் உணரப்பட்டது. இதனால் அனேகமான நூலகர்கள் நூலகவியற் பயிற்சிக்காக இங்கிலாந்து, கனடா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா முதலிய நாடுகளுக்குச் சென்று நூலகக் கல்வியைப் பெறலாயினர்.

இலங்கையிலேயே நூலகவியற் பயிற்சி நெறிகளை உருவாக்குவதற்கான முயற்சிகள் 1960ஆம் ஆண்டளவில் மேற்கொள்ளப்பட்டன. 1960ஆம் ஆண்டுகளில் கொழும்புத் திட்டத்தின் கீழ் இலங்கைக் கைத்தொழில் விஞ்ஞான ஆராய்ச்சி நிறுவனமும், ஆசிய நிறுவனத்துடன் ( Asia Foundation ) கூட்டிணைப்பாக கல்வித் திணைக்களமும் தனித்தனிப் பயிற்சி வகுப்புக்களைச் சிறிய அளவில் நடாத்தின. இவை தவிர, பிரித்தானிய கவுன்சில் ( British Council ) ஐக்கிய அமெரிக்கப் பண்பாட்டு நிலையம் ( U.S. Cultural Centre ) ஆகியனவும் அவ்வப்போது நூலகர்களுக்குப் பயிற்சி அளித்து வந்துள்ளன. இவை யாவும் சேவைக்காலப் பயிற்சியளித்து வந்துள்ளன. இவை யாவும் சேவைக்காலப் பயிற்சியளிக்குந் திட்டங்களாக விளங்கின வன்றி, திட்டமிட்ட பாடவிதான அடிப்படையில் பயிற்சி நெறிகளை நடாத்திப் பரீட்சைகள் மூலம் மாணவர் தகுதிகண்டு சான்றிதழ் வழங்குவதாக அமையவில்லை.

இப்பின்னணியில் 1960ஆம் ஆண்டில் இலங்கை நூலகச் சங்கம் தாபிக்கப்பட்டதைத் தொடர்ந்து இலங்கை நூலகக் கல்வியில் ஒரு முக்கிய மாற்றமேற்பட்டதெனலாம். ஆரம்பத்தில் 6 மாத காலத்திற்குரிய பாடத்திட்டத்தினைக் கொண்டதாக வகுப்பு தொடங்கப்பட்டது. 1965இல் இப்பாடத் திட்டத்தில் கொண்டுவரப்பட்ட மாற்றத்தினால் இப்பாடவிதானம் 3 வருடங்களைக் கொண்டதாக விரிவாக்கப்பட்டதோடு, நூலகங்களில் வேலை செய்யாதோரும் இத்துறையில் பயிற்சி பெற வாய்ப்பளிக்கப்பட்டது. தொடக்க காலத்தில் கொழும்பில் மட்டும் நடாத்தப்பட்ட இவ்வகுப்புகள் காலப்போக்கில் கண்டி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலும் அறிமுகப்படுத்தப்பட்டன.

இலங்கை நூலக சங்கத்தின் தற்போதுள்ள நிர்வாகக் குழு நூலகக் கல்வி சம்பந்தமான பாடவிதானத்தினை மேலும் தரம் வாய்ந்ததாக்கும் நோக்கத்துடன் சில மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளமை நூலகக் கல்வியின் நவீன வளர்ச்சி நெறியினைக் காட்டுகின்றது. இப்புதிய பாடத்திட்டம் 1986இல் அமுலுக்குக் கொண்டுவரப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. நூலகங்களில் கணனியைப் ( Computer ) பயன்படுத்துவதன் முக்கியத்துவத்தினை உணர்ந்து, இலங்கை நூலகச் சங்கம் 1984ஆம் ஆண்டு கணனி சம்பந்தமான பயிற்சி நெறியினை ஆரம்பித்துள்ளமையும் இலங்கையின் நூலகக் கல்வியில் ஏற்பட்டு வருகின்ற துரித வளர்ச்சியினைப் புலப்படுத்துகின்றது.

பல்கலைக்கழகங்களில் நூலகக் கல்வியினை வழங்கும் முயற்சியானது முதன் முதலாக இலங்கைப் பல்கலைக்கழகத்தினால் (பேராதனை) 1961ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. ஆயினும் உரிய போதஅசிரியர்கள் பற்றாக்குறை காரணமாக இம்முயற்சி 1965இல் கைவிடப்பட்டமை பல்கலைக்கழக மட்டத்தில் இக்கல்வியின் வளர்ச்சியில் தடை ஏற்படக் காரணமாயிற்று.

இலங்கை நூலகக் கல்வி வரலாற்றில் தௌஉறிவளை கனிஉந்ட பல்கலைக்கழகக் கல்லூரியின் பங்களிப்பும் குறிப்பிடத்தக்கதாகும். 1968ஆம் ஆண்டு இக்கல்லூரியினால் ஆரம்பிக்கப்பட்ட நூலகப்பயிற்சி நெறியும் ஆசிரியர் பற்றாக்குறை காரணமாக இரு ஆண்டுகளில் நிறுத்தப்படுவதாயிற்று.

1961ஆம் ஆண்டில் நூலகக் கல்விக்குப் பல்கலைக்கழக மட்டத்தில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு பின்னர் இடைநிறுத்தப்பட்டாலும், மீண்டும் 1972இல் பல்கலைக் கழகத் துணைவேந்தரினால் பல்கலைக்கழகங்களில் நூலகக்கல்வி போதிப்பது பற்றி ஆராய ஒரு குழு நியமிக்கப்பட்டது. இக்குழுவின் அறிக்கையின்படி பின்வரும் அம்சங்கள் சிபார்சு செய்யப்பட்டன:

1\. நூலகவியல் ஒரு பாடமாகப் பட்டப்படிப்பு, பட்டப்பின் படிப்பு மாணவர்களுக்கு அறிமுகப்படுத்துவதாயின் முழுநேர ஆசிரியர்களைக் கொண்ட, தனித்துறையினுல் நடாத்தப்பட வேண்டும்;

11\. பட்டப்பின் படிப்புப் பயிற்சி நெறி " Post - Graduate Diploma in Library and Information Studies" எனப் பெயரிடப்படுவதுடன், நூலக சேவையிலுள்ளோருக்கு முன்னுரிமை அளித்தல் வேண்டும்; இது ஓராண்டு முழுமை வாய்ந்ததாகவும், எட்டு விருப்பத்திரங்களைக் கொண்டதாகவும் அமைதல் வேண்டும்;

111\. நூலகவியலை ஒரு பாடமாகக் கற்க விரும்பும் கலைமாணி, விஞ்ஞான மாணி பட்டதாரி மாணவர்களுக்கு இரண்டாம் வருடத்திலிருந்து நூலகக்கல்வி போதிப்படல் வேண்டும்.

இச்சிபார்சுகளுக்கமைய 1973இல் இலங்கைப் பல்கலைக்கழகக் களனி வளாகத்தில் பட்டதாரி மாணவர்களுக்குரிய வகுப்புக்கள் தொடங்கப்பட்டன. 1975இல் இப்பயிற்சி நெறியில் மேலும் மாற்றங்கள் செய்யப்பட்டன. நூலகவியலைப் பட்டப் படிப்பிற்குரிய ஒரு பாடமாகக் கற்பதிலும் பார்க்க, அதனை ஒரு சிறப்புப் பாட மாகக் கற்பதன் மூலம் தொழில் வாய்ப்புக் கிடைக்கும் சந்தர்ப்பம் உண்டென்ற கருத்து மாணவர்கள் மத்தியில் நிலவியது. இந்த விடயம் ஆராயப்பட்டு 1975ஆம் ஆண்டு முதல் நூலகவியலைச் சிறப்புப் பாடமாகக் கற்கும் வாய்ப்பளிக்கப்பட்டது. பட்டப்பின் படிப்புப் பாடநெறி 1974ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. அத்தோடு 1976ஆம் ஆண்டு தொடக்கம் இப்பல்கலைக்கழகத்து நூலகவியற்றுறையினரால் நூலகவியற் பயிற்சி பெற விரும்புவோருக்கென சான்றிதழ்ப் பயிற்சிநெறி ஒன்று தொடங்கப்பட்டமையும் நூலகக் கல்வியிலேற்பட்ட வளர்ச்சியினையே காட்டுகின்றது.

இவற்றைத் தொடர்ந்து கொழும்புப் பல்கலைக்கழகத்தினுல் 1982ஆம் ஆண்டு நூல கக்கல்வி சம்பந்தமான பகுதிநேர வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன. இப்பரீட்சை யில் சித்தியடைவோருக்கு டிப்ளோமா பட்டம் வழங்கப்பட்டதோடு, இதில் சித்தி யடையும் பட்டதாரி மாணவர்கள் மேலும் ஓராண்டு பயின்று நூலகவியலிற் பட்டப்பின் படிப்பைத் தொடரும் வாய்ப்பும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இவை தவிர, 1970இல் இலங்கைத் தேசிய நூலக சேவைகள் சபை தாபிக்கப்பட் டதையடுத்து, இச்சபையினுல் பாடசாலை நூலகர்கள், பொதுசன நூலகர்கள் ஆகி யோருக்குப் பயிற்சியளிக்கும் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டமையும் குறிப்பிடப்பட வேண்டியதாகும்.

இவ்வாறாக, இலங்கையில் நூலகங்கள் எண்ணிக்கையிலும், சேவையிலும் அதிகரிக்கத் தொடங்கியமையையடுத்து, நூலகக் கல்வியின் முக்கியத்துவம் கருத்திற் கொள்ளப்பட்ட தோடு, அக்கல்வித்துறையில் துரித வளர்ச்சியேற்பட்டு வருகின்றமையையும் நாம் அறியக்கூடியதாக இருக்கின்றது.

# யாழ். குடாநாட்டின் நடமாடும் நூலகம்.

-கா.மாணிக்கவாசகர்
நூலகர்,
யாழ்.மத்திய கல்லூரி.

இந்நூற்றாண்டின் ஆரம்பத்தில் அமெரிக்காவில் ஆங்காங்கே நிலையான நூலகங்களும் கிளை நூலகங்களும் நிறுவப்பட்டு வந்த போதிலும் கிராமவாசிகளுக்கு இந்நூலகங்களின் சேவையும் பயனும் கிடைக்கப்பெறாதிருந்தமையை நிவர்த்தி செய்ய எத்தனித்தோர் பலர். ஆயினும் எவரும் இதற்கு வழிகண்டிலர். இந்நிலையில் நூலகவியக்கத்தின் தந்தையெனத் தகும் மெல்வில் டியூயி, மத்திய நூலகத்திலிருந்த பெட்டிகள் ஒவ்வொன்றிலும் ஐம்பது புத்தகங்களை அடுக்கித் தொலைவிலிருந்த கிராமங்களுக்கு அனுப்பி, அங்குள்ள வாசகர்கள் அவற்றைப் பயன்படுத்திய ஆறு மாதங்களின் பின் வேறு ஐம்பது புத்தகங்களை அனுப்பும் ஒரு முறையை நடைமுறைப்படுத்தினர். இது ஓர் இலகுவான பயனுள்ள முறையேயாயினும், இது டியூயின் மூளையில் தானே உதிக்க வேண்டியதாயிற்று.

அன்று பெட்டிகள் ஏற்றி இறக்கிய இச்சேவை பல்கிப் பெருகி நடமாடும் நூலகச் சேவையாக உலகின் பல பாகங்களிலும் நடைபெறுகின்றது. கைத்தொழிலில் முன்னேறிய நாடுகளில் நடமாடும் நூலகம், ஒரு தகவலகமாகவும், அறிவுக்களஞ்சியமாகவும், கலைமன்றமாகவும் சேவையாற்றுகிறது. ஐக்கிய நாடுகள் கல்வி, விஞ்ஞான, கலாச்சார ஸ்தாபனத்தின் முயற்சியால் டில்லி நகரின் சுற்றுப்புறங்களில் ஓர் நடமாடும் நூலகச் சேவை 1953ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் இதற்கு நெடுங்காலத்திற்கு முன்பே 'ஞானரதம்' என்னும் பெயரில் ஊர்தி நூலக மாட்டு வண்டிச் சேவை, தமிழ் நாட்டில் சென்னை நூலகச் சங்கத்தால் நடாத்தப்பட்டது. இச்சிறிய சேவையால் உண்டான பெரும் பயனை அறிந்த கோயமுத்தூர் நூலகக்குழு 52,000 ரூபா செலவில் சகல அம்சங்களும் பொருந்திய நடமாடும் நூலகமொன்றை வாங்கியது. இதில் 800 நூல்களை இருக்கைகளிலும் 1500 நூல்களை இருப்பிலும் வைக்கக்கூடிய அமைப்பும், நாடா ஒலிப்பதிவுக்கருவியும், திரைப்படக் காட்சிக் கருவியும், மின்சக்தி உற்பத்திப் பொறியும் அடங்கியிருக்கின்றன.

ஆகவே இத்தகைய பயன்மிக்க சேவையை நாம் பெருமளவில் ஆரம்பிக்க முடியாதிருப்பினும் சிறிய அளவில் ஒரு சேவையைக் காலதாமதமின்றி ஆரம்பிப்பது யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கும் பயன்தருவதாயிருக்கும். தாய்லாந்தில் ஆயிரம் நூல்களைக் கொள்ளக்கூடிய, இரு குதிரைகளால் இழுக்கப்படும் நடமாடும் நூலகச் சேவை இருந்து வருவதும் கவனிக்கத்தக்கது. ஒரு கட்டிடத்தைக் கட்டி, அதில் நூலகச் சேவையை நடத்துவதிலும் பார்க்க ஒரு நடமாடும் நூலகச் சேவையை அமைப்பதில் மக்களின் தேவைகள், தெருக்கள், வீதிகள் முதலியவைகளை அனுசரித்துத் திட்டமிடல் வேண்டும். சாதாரணமாக மூன்று தொன் நிறையுள்ள போக்குவரத்து பஸ் வண்டியின் அடித்தளமே நடமாடும் நூலகத்திற்கு உகந்தது. இதன் உட்புறத்தின்

மூன்று பக்கங்களிலும் நூலகத் தளபாட அளவுகளுக்கு அமைந்த தட்டலுமாரிகள் உறுதியாகப் பொருத்தப்படல் வேண்டும். வண்டி நகரும் போதும் சடுதியாக நிறுத்தும் பொழுதும் வண்டி குலுங்குமாகையால் புத்தகம் வைக்கும் தட்டுகள் ஒன்று அல்லது ஒன்றரை அங்குலம் பின்பக்கச் சரிவுடையதாய் இருத்தல் வேண்டும். காற்றோட்டமும் போதிய வெளிச்சமும் அத்தியாவசியம். இடத்தைப் பேணிச் சாரதியின் ஆசனமே நூலகரின் ஆசனமாகவும், புத்தக விநியோக முகப்பிடமாகவும் இருத்தல் வேண்டும். இவ்விடத்தில் நடமாடும் நூலகத்தின் நிர்வாகியே வண்டிச்சாரதியாகவும் இருப்பது வழமையாகும். வாசகர்களைக் கவர்வதற்கு நூலகத்தில் வைக்கப்படும் சகல அம்சங்களும் நடமாடும் நூலகத்திலும் இடம் பெறல் வேண்டும்.

யாழ்.குடாநாட்டில் இத்தகைய சேவையை ஆரம்பிக்கும் தகுதி யாழ்.பொதுசன நூலகத்திற்கு மாத்திரமே உண்டு. இச்சேவையில் முன்கூட்டியே விண்ணப்பித்து அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொண்டவர்கள் மாத்திரமே பயன்பெறலாம். பளை தொடக்கம் பருத்தித்துறை, காங்கேசன்துறை, காரைநகர் முதலிய பகுதிகளுக்கும் இச்சேவை நீடிக்கப்படுவதாகில் ஒன்றுக்கு மேற்பட்ட நடமாடும் நூலகங்கள் தேவைப்படும். அத்துடன் மத்திய நூலகத்தில் முக்கியத்துவம் வாய்ந்த நூல்களில் பத்துப் பிரதிகளாவது இடம்பெறல் வேண்டும். அத்துடன் மத்திய நூலகத்தில் பெருந்தொகையான நூல்கள் இருத்தல் வேண்டும்.

மக்களின் விருப்பங்களையும் தேவைகளையும் அறிந்து ஏற்ற நூல்களை அவர்களுக்கு வழங்குவதே நடமாடும் நூலக சேவையின் நோக்கம். ஆகவே பயிற்றப்பட்ட நூலகர் ஒருவர் இச்சேவையிற் கடமையாற்ற வேண்டும். புகையிலை செய்பவர்களும், மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களும் வெவ்வேறு நூல்களையே விரும்புவர். இவர்களின் தேவைகளை நிறைவேற்றுவது நடமாடும் நூலகத்தின் கடமையாகும். இடையிடையே கல்விப் படக்காட்சிகளும், ஒலிப்பதிவு செய்யப்பட்ட நிகழ்ச்சிகளும் நடைபெறல் வேண்டும். சேவையளிக்க வேண்டிய பகுதிகள் அதிகமாயின் ஒவ்வொரு பகுதிக்கும் மாதமொரு முறையாவது சென்று வாசகர்கள் புதிய நூல்களைத் தங்கள் இருப்பிடங்களுக்கு எடுத்துச் சென்று வாசிக்கும் வாய்ப்பை உண்டாக்க வேண்டும். சில முக்கியமான உடனுதவும் நூல்கள் நிரந்தரமாக இருக்க வேண்டும். நூல்கள் நூலகத்தில் இருப்பதைப் போல வகைப்படுத்தப்பட்டு அடுக்கப்பட்டிருப்பதுடன் நூற்பட்டியல்களும் இருத்தல் அவசியம். இச்சேவையால் யாழ்.குடாநாட்டிலுள்ள வாசகர்கள் அனைவரும் நூற்றுக்கணக்கான புதிய நூல்களைப் படிக்கக் கூடியதாயிருக்கும்.

ஆயிரக் கணக்கில் பணம் தேவைப்படும் இந்நடமாடும் நூலகத் திட்டத்திற்குக் குடாநாட்டிலுள்ள தொழிலதிபர்களும், கல்வியாளர்களும், முதலுடையவர்களும் தங்கள் ஊர் மக்களின் நலன்கருதிப் பணஉதவி புரிந்து, இத்திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவர முயற்சிசெய்ய வேண்டியது அவர்களின் கடமை.

*****